இறக்கை: 13 இறகு: 7

காக்கை கரவா கரைந்துண்ணும்

# காக்கைச் சிறகினிலே

இலக்கிய மாத இதழ்

ஜூலை 2024 | விலை ₹ 50



## பகடை சாமி கதை

• அ. கா. பெருமாள்

## ஆணவத்திற்கான கடிவாளம் எங்கள் நாற்பது

• இரா.எட்வின்

கட்டுரை: சித்த மருத்துவர் அருளமுதன்

# சித்த மருத்துவத்தைத் திருடுவதற்கு துணைபோகும் தமிழர்கள்

தமிழரின் அறிவியல் முதிர்ச்சியின் ஆதாரமாக இருப்பது தமிழ் சித்த மருத்துவம் ஆகும். பல்வேறு காலகட்டங்களில் இதைத் திருடி ஆயுர்வேதமாக்கும் முயற்சிகளில் சமஸ்கிருத வல்லுனர்கள் ஈடுபட்டு வருகிறார்கள். பல நேரங்களில், அதற்கு தமிழர் என்னும் அடையாளத்துடன் இருப்பவர்ளின் பங்கு முக்கியமாகிறது. கடந்த நூற்றாண்டுகளில் நடந்த அந்த வரலாற்றுபிழைகளை இன்று சரிசெய்ய முடியாது: ஆனால், நம் கண்முன்னே இன்றும் நடந்துகொண்டிருக்கும் திருட்டுகளை நாம் இன்று தடுக்காவிட்டால், அது நிரந்தர வரலாற்றுபிழைகளாக ஆகிவிடும். அடுத்த தலைமுறையினர் நம்மை இகழ்வார்கள். எனவே இதை வெளிப்படையாக பேசியே ஆகவேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம்.

### தமிழர்களுக்கென மருத்துவ முறை இல்லை:

*Central University of Tamil Nadu* என்ற ஒரு பல்கலைகழகம் திருவாரூரில் இருக்கிறது. அதன் வரலாற்று துறையில் பணிபுரியும் கனகரத்தினம் என்பவர் *Journal of Ayurveda and Integrative Medicine* என்னும் மருத்துவ இதழில் 2020-ல் “*Revitalisation of Ayurveda in Colonial Tamil region and Contributions of Pandit Srinivasa Narayana Iyengar - A Historical Perspective*” என்ற ஒரு கட்டுரை வெளியிட்டுள்ளார். அதன் சாராம்சம் “தமிழகத்துக்கு என்று தனி பாரம்பரிய மருத்துவ முறை கிடையாது. முற்கால தமிழகத்தில் வேத இந்து மரபின் சமஸ்கிருத ஆயுர்வேத மருத்துவம் தான் இருந்தது. வெள்ளைகாரர்கள் ஆங்கில மருத்துவத்தை வளர்க்க, இந்தியாவின் பாரம்பரிய மருத்துவமாகிய ஆயுர்வேதத்தை நசுக்கினர். 1883 ஆம் ஆண்டு திருச்சிக்கு அருகில் கரூரில் பிறந்த பண்டிதர் ஷ்ரீனிவாச நாராயண அய்யங்கார், ஆயுர்வேதத்தை மீட்டெடுக்க பெரும் முயற்சிகளை மேற்கொண்டார். அவர் பனாரஸ் (வட இந்தியா) சென்று ஆயுர்வேதம் கற்றுத் திரும்பினார். இவர் ஆயுர்வேதத்தை தமிழகத்தில் மீட்டு எடுப்பதற்காக பல முயற்சிகளைச் செய்துள்ளார். வெள்ளைக்காரர்கள் காலத்தில் பிராமணர்கள் அரசு வேலையில் அதிக வசதியாக இருந்தார்கள். பிராமணர் அல்லாதவர்கள் பலவகைகளில் வேறுபடுத்தப்பட்டதால், அவர்கள் பிராமணர்களை ஆரியர்கள் என்றும் மற்றவர்களை திராவிடர்கள் என்றும் கூறினர். இந்த திராவிட சித்தாந்தத்தின் விளைவாக தமிழுக்கு அடையாளம் கொடுப்பதற்காக, தமிழில் இருந்த வைத்திய நூல்களை திரட்டி அதுவரை இல்லாத புதிய சித்த மருத்துவம் என்னும் பெயரை திராவிடவாதிகள் வைத்தனர். இந்தச் சூழலில், சமஸ்கிருதவாதிகள் தமிழ் வைத்தியத்தை கீழ்தரமாக எண்ணுவதை பண்டிதர் ஷ்ரீனிவாச நாராயண அய்யங்கார் கண்டித்தார். தமிழ் ஆயுர்வேதமும் சமஸ்கிருத ஆயுர்வேதமும் ஒற்றுமையாக ஒன்றாக ஆயுர்வேதம் என்று சொல்லவேண்டும் என்று பல முயற்சிகள் செய்தார். தமிழ் மொழியின் அடிப்படையில் சித்த மருத்துவம் தனியாக பிரிந்து போவதை இவர் விரும்பவில்லை. எனினும் திராவிடவாதிகள், தமிழில் இருந்த ஆயுர்வேதத்தை திரட்டி தமிழ் சித்தா என்று உருவாக்கி விட்டனர்.”

தமிழ் செம்மொழி என்றால், தமிழ் தொல்குடி என்றால் அதற்கென தனித்த மருத்துவ முறை இருந்திருக்க வேண்டும். போரில் ஏற்பட்ட விழுப்புண்ணை எந்த மருத்துவ முறையால் ஆற்றினர்? அதைத்தான் கடந்த நூற்றாண்டில் தமிழர்கள் மீட்டு எடுத்து இருக்கின்றார்கள். சித்தர்கள் எனப்பட்ட பெருமக்களால் இவைகள் ஓலைச்சுவடிகளில் எழுதப்பட்டு பாதுகாக்கப்பட்டதால், இதை சித்த மருத்துவம் என்று பெயரிட்டு அழைக்கிறோம். இது அரசியல் அமைப்பால் அங்கீகரிக்கப்பட்ட பெயர்தான், அதற்கான படிப்புகளை அரசியல் அமைப்பு அங்கீகரித்து இருக்கிறது. இந்தச் சூழலில் இதைப்போன்ற பொய் புரட்டுகளை பரப்பி வலாற்று திரிபுகளை அறிவியல் இதழ்களில் எழுதுவதால், வெளிநாட்டினர் இதைத்தான் நம்புவார்கள்.. “பிழைப்புக்காக நான் இதயவியல் நிபுணராக இருக்கிறேனே தவிர, தமிழனாகிய நான் தமிழுக்கும் சித்த மருத்துவத்துக்கும் பெருமை

**தமிழ்நாட்டில் உள்ள இன்றைய பட்டதாரி ஆயுர்வேத மருத்துவர்கள் கூட தமிழரின் சித்த மருத்துவத்தை ஆயுர்வேத மருத்துவமாக கூறிவருவது வேதனை அளிக்கிறது. அந்த பாடத்திட்டத்தில் தவறான வரலாற்று தகவல்களை படிப்பிக்கிறார்கள் என்றே தோன்றுகிறது. இதற்கு பதில் எழுதவேண்டிய பொறுப்பு தமிழ் மொழியியல், வரலாறு என பல்வேறு அரசு துறைகளுக்கு இருக்கிறது.**

சேர்க்கவே விரும்புகிறேன்" என்று கூறியவர் நவீன மருத்துவரும் ஹார்வேர்டு தமிழ் இருக்கையை அமைத்தவருமான டாக்டர். ஜானகிராமன். அமெரிக்காவில் வசிக்கும் இவர் சித்த மருத்துவத்தின் வர்ம சிகிச்சைக்கான படிப்பை ஆரம்பிப்பதற்காக மணிப்பால் பல்கலைகழகத்துக்கு 10 லட்சம் நன்கொடை கொடுத்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. தமிழ்நாட்டில் உள்ள இன்றைய பட்டதாரி ஆயுர்வேத மருத்துவர்கள் கூட தமிழரின் சித்த மருத்துவத்தை ஆயுர்வேத மருத்துவமாக கூறிவருவது வேதனை அளிக்கிறது. அந்த பாடத்திட்டத்தில் தவறான வரலாற்று தகவல்களை படிப்பிக்கிறார்கள் என்றே தோன்றுகிறது. இதற்கு பதில் எழுதவேண்டிய பொறுப்பு தமிழ் மொழியியல், வரலாறு என பல்வேறு அரசு துறைகளுக்கு இருக்கிறது.

### தமிழர்களிடம் பாரம்பரிய மருத்துவத்துக்கு வரலாறு கிடையாது:

"*Comparative analysis of ayurvedic and siddha system of Indian medicine*" என்ற கட்டுரை *Global Journal of Research on Medicinal Plants & Indigenous Medicine* என்ற மருத்துவ இதழில் 2012 ஆம் ஆண்டு ராஜஸ்தான் மற்றும் மேற்கு வங்காளத்தை சார்ந்த ஆயுர்வேத மருத்துவர்களால் எழுதி வெளியிடப்பட்டது. அதன் சாராம்சம் பின்வருமாறு: "ஆயுர்வேத மருத்துவம் என்பது வேதகால சமஸ்கிருதத்தின் சொத்து, அதற்கு நீண்ட நெடிய வரலாறு இருக்கிறது. ஆனால் சித்த மருத்துவம் என்று சொல்லப்படுவது, சமீப காலத்தில் தமிழ் மொழியை பெரியதென காட்டுவதற்கான அரசியலுக்காக உருவாக்கபட்டது"

இதைபோன்ற செய்திகளை உலக அளவில் உலவவிட வேண்டிய அவசியம் என்ன இருக்கிறது என்பதை நாம் சிந்திக்க வேண்டும். இதற்கு பதில் சொல்லும்படியான ஆய்வுகளை தமிழ் நாட்டின் வரலாற்று மொழியியல் ஆராய்ச்சியாளர்கள் செய்வதற்காக நிதியை அரசு ஒதுக்கி உண்மைத் தகவல்களை உலகுக்கு உரக்க உரைக்க வேண்டும். தமிழ் செம்மொழி என்று நிரூபணம் ஆனபிறகு, மொழியையும் தாண்டி அதன் மருத்துவம் மற்றும் அறிவியல் கூறுகளையும் நாம் வெளிகொணர வேண்டாமா?

### ஆதிச்சநல்லூரில் நடைபெற்ற ஆயுர்வேத அறுவை சிகிச்சை:

*Trepanation* என்பது மண்டையில் ஓட்டை (துளை) போட்டு மூளையில் அறுவை சிகிச்சை செய்யும் முறையாகும். தொல்லியல் துறையினர் உலகில் பல இடங்களில் கிடைத்த மண்டை ஓடுகளில் அறுவை சிகிச்சை செய்ததற்கான ஓட்டை இருந்தால் அது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது. புத்தர் மன்னராக இருந்தபோது ஜீவகா என்னும் ராஜ வைத்தியர் புத்தரின் தனிப்பட்ட மருத்துவராக இருந்தார். அவர் எழுதிய நூலில் இதைப்பற்றி குறிப்பிட்டுள்ளார். ஆயுர்வேத அறுவை சிகிச்சையின் தந்தை எனப்படும் சுஸ்ருதர் எழுதிய நூலில் இதைபற்றி குறிப்பிடப்படவில்லை. தேரன் எனும் சித்தர் இதை செய்ததாக சித்த மருத்துவ நூல்கள் குறிப்பிடுகிறது. எனினும் ஆதாரமாக எந்த மண்டைஓடும் இந்தியாவில் கிடைக்கவில்லை.

இந்த நிலையில் தமிழ்நாட்டின் தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள ஆதிச்சநல்லூரில் தொல்லியல் துறையினர் நடத்திய அகழ்வாராய்ச்சியில் கிடைத்த இரண்டு மண்டை ஓடுகளில் இந்த அறுவை சிகிச்சை செய்ததற்கான ஓட்டை இருந்தது. அந்த மண்டைஓடுகள் சென்னை தொல்லியல் மியூசியத்தில் பாதுகாக்கப்படுகிறது. இந்த தகவல் தெரிந்த உடனே, கேரளாவை சார்ந்த தொல்லியர் அறிஞர் சத்யமூர்த்தியும், ஆந்திராவை சார்ந்த நரம்பியல் நிபுணராகிய மருத்துவர் ராஜா ரெட்டியும் சென்னைக்குச் சென்று, மியூசியத்தில் இருந்த மண்டை ஓடுகளை புகைப்படம் எடுக்கின்றனர். உடனே இதைபற்றிய கட்டுரையை *Neurology India* என்ற மருத்துவ இதழில் "*Cranial trepanation in ancient India*" என்ற தலைப்பில் 2019 ல் எழுதுகின்றனர். அதன் சாராம்சம் பின்வருமாறு: "ஆயுர்வேத அறுவைசிகிச்சை நிபுணர் சுசுருதர் தனது நூலில் கூறியுள்ள தூமி எனப்படும் கத்தியால்தான் இந்த அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. அந்த கருவிகள் தட்சஷீலத்தில் நடத்தப்பட்ட அகழ்வாய்ச்சியில் கிடைத்தது. அந்த மண்டை ஓடு ஆதிச்சநல்லூரில் கிடைத்து இருக்கிறது. இது இந்தியாவின் ஆயுர்வேத

**சித்த மருத்துவத்தில் நெய்க்குறி என்ற ஒரு நோய்கணிப்பு முறை உள்ளது. அதன்படி, நோயாளியின் சிறுநீரை சேகரித்து, அதில் ஒருதுளி நல்லெண்ணெயை விட்டால், அது குறிப்பிட்ட வடிவத்தை காட்டும், சிலநேரம் மிதக்கும், சிலநேரம் கீழே தாழும், சிலநேரம் சிறுசிறு துளிகளாகச் சிதறும், வலைபோல பரவும். இதை வைத்து நோய்களைக் கணிக்க முடியும்.**

மருத்துவத்தின் சிறப்பை காட்டுகிறது. சுசுருதர் தனது நூலில் இந்த மண்டை ஓட்டு அறுவை சிகிச்சையை பற்றி எழுதாவிட்டாலும் ஆதிச்சநல்லூரில் கிடைத்த இதை சேர்த்துகொள்ள வேண்டும்."

ஆதாரம் தமிழ் நாட்டில் கிடைத்தால் உடனே அதை தனது என்று சொல்ல வேண்டிய அவசியம் அவர்களுக்கு இருக்கிறது. ஆனால், தமிழ் நாட்டில் உள்ள தொல்லியல் துறை, சித்த மருத்துவ துறை, அறுவை சிகிச்சை துறையினர் அனைவரும் இணைந்து ஏன் இது தமிழரின் பாரம்பரிய அறுவை சிகிச்சை என்று சொல்லவில்லை? தமிழக தொல்லியல் துறையின் கட்டுபாட்டில் இருந்த மண்டைஓடுகளை அவர்களின் அனுமதி இல்லாமல், அவர்களின் பெயர்கள் இல்லாமல் மற்றவர்கள் வெளியிடுவதை எப்படி அனுமதிக்க முடியும்? இதைபோல, நாம் வட இந்தியாவில் சென்று வெளியிட்டால் அவர்கள் விடுவார்களா? இனியும் நமது வரலாற்றை திருத்த நாம் என்ன செய்ய போகிறோம்?

**நெய்க்குறியின் படங்கள் திருடப்பட்டு ஆயுர்வேதமயமாக்கம்:**

சித்த மருத்துவத்தில் நெய்க்குறி என்ற ஒரு நோய்கணிப்பு முறை உள்ளது. அதன்படி, நோயாளியின் சிறுநீரை சேகரித்து, அதில் ஒருதுளி நல்லெண்ணெயை விட்டால், அது குறிப்பிட்ட வடிவத்தை காட்டும், சிலநேரம் மிதக்கும், சிலநேரம் கீழே தாழும், சிலநேரம் சிறுசிறு துளிகளாகச் சிதறும், வலைபோல பரவும். இதை வைத்து நோய்களைக் கணிக்க முடியும். இதைபற்றி தேரன் நெய்க்குறி என்ற ஒரு நூலே உள்ளது. முதன்முதலாக எயிட்ஸ் பரவியபோது, சென்னை தாம்பரம் சானடோரியம் நவீன மருத்துவர் தெய்வநாயகம் அவர்கள் சித்த மருந்துகளை அதற்கு பயன்படுத்தினார். எயிட்ஸ் நோயை கணிக்க அதிகம் செலவு ஆவதால், அவர் சித்த மருத்துவத்தின் நெய்குறியைப் பயன்படுத்தும் ஆலோசனையைத் தெரிவித்தார். அவரின் மருத்துவர் குழுவில் சித்த மருத்துவர்களும் அடக்கம். அவர்கள் ஏராளமான நோய்களுக்கு நெய்க்குறியைப் பயன்படுத்தி ஆவணப்படுத்தினர். எயிட்ஸ், டிபி, ஆஸ்துமா போன்ற எண்ணற்ற நோய்களுக்கான நெய்குறி புகைப்படம் அவர்களிடம் இருந்தது. அந்த குழுவில் பணிபுரிந்த சித்த மருத்துவர் செல்வசண்முகம் அவர்கள், இந்த புகைப்படங்களை 2003 ஆம் ஆண்டு சென்னையில் நடந்த ஒரு மருத்துவ மாநாட்டில் உரையாற்றும் போது அனைவருக்கும் காட்டினார். அதற்காக அவற்றை குறுந்தகட்டில் (சிடி) கொடுக்க வேண்டியிருந்தது. முதன் முதலாக சித்த மருத்துவத்தின் நெய்குறியை பற்றிய இத்தனை தகவல்களை பார்த்தபிறகுதான் மற்ற சித்த மருத்துவர்களும் இதை பரவலாக பயன்படுத்த ஆரம்பித்தனர். தமிழக ஆயுர்வேத மருத்துவர்களும் இந்த மாநாட்டில் கலந்து கொண்டனர். அந்த குறுந்தகடு அங்கிருந்து திருடப்பட்டது.

ஆயுர்வேதாவின் மூல நூல்களில் இந்த நெய்குறியைப் பற்றி எந்த குறிப்புமே இல்லை. எனினும் பிற்காலங்களில் எழுதப்பட்ட நூல்களில் இதைபற்றிய குறிப்புகள் சேர்க்கபட்டன. 2011 ம் ஆண்டு, ஆயுர்வேதா என்ற இதழில், *"A study on Tailabindu pariksha - An ancient Ayurvedic method of urine examination as a diagnostic and prognostic tool"* என்ற பெயரில் கட்டுரை வெளிவந்தது. அந்த கட்டுரையில் கொடுக்கப்பட்ட அனைத்து புகைப்படங்களும் ஏற்கனவே மாநாட்டில் திருடப்பட்ட குறுந்தகட்டில் இருந்ததுதான் என்று டாக்டர் செல்வ சண்முகம் தெரிவித்தார். இதைகுறித்து, அவர் மேலும் தெரிவித்ததாவது: "அந்த மாநாட்டை ஏற்பாடு செய்த சித்த மருத்துவர்களிடம் கேட்டபோது, சென்னையை சேர்ந்த ஒரு ஆயுர்வேத மருத்துவருக்காக அந்த குறுந்தகடு திருடப்பட்டதை ஒத்துகொண்டனர். சித்த மருத்துவர்கள் மத்தியில் புனிதர்களாக உலாவரும் இரண்டு சித்த மருத்துவ தலைவர்கள்தான் இந்த திருட்டை சுய ஆதாயத்துக்காக செய்துள்ளனர். சென்னை சாய்ராம் ஆயுர்வேத மருத்துவ கல்லூரியில் பேராசிரியராக பணிபுரியும் ஆயுர்வேத டாக்டர். வனிதா முரளிகுமார் அவர்கள் தான் இந்த திருட்டைச்(*plagiarism*) செய்து கட்டுரையை வெளியிட்டவர். இதுகுறித்து விளக்கம் கேட்டு அவருக்கும், அந்த இதழின் ஆசிரியருக்கும், ஆயுர்வேதக் கவுன்சிலுக்கும் வக்கீல் கடிதம்

அனுப்பினேன். எந்த பதிலும் இல்லை. இதைபோன்ற திருட்டுகளுக்கு சித்த மருத்துவர்களே கையாளாக இருப்பது மன்னிக்க முடியாத குற்றமாகும். என்னிடம் மூல புகைப்படங்கள் உள்ளன, அவர்களிடம் திருடப்பட்ட குறுந்தகடுதான் உள்ளன. இதுதான் இதற்கான சாட்சி. அவர்களின் நோயாளிகளிடம் இருந்து எடுக்கப்பட்ட படங்களை பயன்படுத்தாமல், எனது புகைப்படங்களை பயன்படுத்துவது *plagiarism* எனும் பிரிவின் கீழ் அறிவு திருட்டாகும். அந்த ஆய்வுகட்டுரையை வெளியிட்ட இதழும் ஆயுர்வேத துறையின்ருடையது என்பதால், அவர்களும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை."

இதற்கு மேலும் தமிழ்நாட்டிலுள்ள ஆயுர்வேத மருத்துவர்கள் தமிழுக்கு துரோகம் செய்யமாட்டார்கள் என்று நம்புவோம். ஆயுர்வேத பாடபுத்தகத்தில் தமிழ்சித்த மருத்துவத்துக்கு எதிரான கருத்துக்கள் இருக்குமோ என்ற எண்ணம் வருகிறது. ஆயுர்வேதம் படித்த உடனே, தமிழ் பற்று குறைந்து சமஸ்கிருதவாதியாக மாறிவிடுகிறார்கள் தமிழர்காள்.

**அம்பலமான தமிழ் ஆராய்ச்சியாளரின் திட்டமிடப்பட்ட திருட்டு:**

"வேர்பாரு தழைபாரு மிஞ்சினக்கால் மெல்ல மெல்ல பற்ப செந்தூரம் பாரே" இந்த மருத்துவ பழமொழிக்கேற்ப, முதலில் மூலிகைகளின் வேர் தழைகளால் மருத்துவம் செய்தபோது, பலன் அளிக்காவிட்டால், பிறகு ப்ற்ப செந்தூரங்களை பயன்படுத்துவதே முறையாகும். சித்தாவில் தங்கத்தை மூலிகை சாறுகளால் அரைத்து புடமிட்டு பற்பமாக்கி மருந்தாக பயன்படுத்தி வருகிறோம், இது நானோ அளவில் இருக்கிறது. ஆயுர்வேதத்தில் தனித்த தங்கத்தை பற்பமாக்கும் முறைகள் இல்லை. ஆயுர்வேதத்தில், தங்கத்தை பிற உலோகங்கள் (வங்கம், மெர்குரி, தாளகம்) கலந்து பற்பமாக்கும் முறைகளே உள்ளன, இவற்றை அவர்கள் சொர்ண பஸ்மா என்பர். எனவே அடிப்படையில் தங்க பற்பமும், சொர்ண பஸ்மாவும் வேறு வேறுதான். சித்தா தங்க பற்பத்தை சென்னையை சார்ந்த ஜெயா இந்திய மருந்து செய்நிறுவனம் தயார் செய்கிறது. இதன் உரிமையாளர் புகழ்பெற்ற சித்தமருத்துவர் ஜெயபிரகாஷ் நாராயணன் ஆவார்.

தமிழ்நாட்டை சார்ந்த முத்துகுமரன் பக்கிரிசாமி என்னும் ஆராய்ச்சியாளர் கனடா நாட்டின் கண்கார்டியா பல்கலைகழகத்தில் பேராசிரியராக இருக்கிறார். இவரிடம் ஜெயா மருந்து நிறுவனத்தினர் ஆராய்ச்சி செய்வதற்காக தங்க பற்பத்தை கொடுக்கிறார்கள். கனடாவில் தங்க பற்பம் எப்படி புற்று நோயில் வேலை செய்கிறது என்ற ஆராய்ச்சிகள் நடக்கும்போது மூத்த புகழ்பெற்ற சித்த மருத்துவர் சிவராமன் அங்கு சென்று பார்வையிடுகிறார், அந்த ஆராய்ச்சி முடிவுகளை நேச்சர் என்ற அறிவியல் இதழில் வெளியிடப்பட இருக்கிறது, இந்த இதழ் உலகின் முன்னணி அறிவியல் இதழாகும், இதில் வெளிவந்தால், தமிழரின் சித்த மருத்துவத்துக்கும், தமிழுக்கும், தமிழரின் நானோடெக்னாலஜி அறிவுக்கும் உலக அளவில் அங்கீகாரம் கிடைக்கும். இது தமிழரின் வாழ்வில் பொன்னாளாக இருக்கும், என்ற நம்பிக்கையை முகநூலில் பகிர்கிறார். ஒட்டுமொத்த தமிழ் மக்களுமே அந்த கட்டுரைக்காக காத்துக் கொண்டிருந்தனர். அனைவரும் ஒரு தமிழரால் தமிழ் மருந்து உலக அரங்கில் பேசப்படபோகிறது என்ற எதிர்பார்ப்பில் இருந்தனர்.

அந்த கட்டுரை நேச்சர் இதழில் வெளிவந்த பிறகு, பல பத்திரிகைகளில் இதைபற்றிய சிறப்பு பார்வை வந்தது. 5000 ஆண்டுகளுக்கு முன்னரே இந்தியாவில் தங்கத்தை நானோவடிவில் மாற்றும் தொழில் நுட்பம் ஆயுர்வேதத்தில் இருந்துள்ளது, இதை கனடாவின் ஆராய்ச்சியாளர் பக்கிரிசாமி நிரூபித்துள்ளார் என்று உலக அளவில் புகழாரம் கிடைத்தது. அந்த கட்டுரைகளை படித்துபார்க்கும் போது கண்களில் தண்ணீர் வந்தது, ஆனந்த கண்ணீர் அல்ல, அது துரோகத்தின் சுயசரிதை.

2017 ஆம் ஆண்டு நேச்சர் இதழில் "*Comparative study on cellular entry of incinerated ancient gold particles (Swarna Bhasma) and chemically synthesized gold particles*" என்ற தலைப்பிலும், 2018 ஆம் ஆண்டு, *Journal of Nanoscience and Nanotechnology* என்ற இதழில் "*Enhanced Internalization of Indian Ayurvedic Swarna Bhasma (Gold Nanopowder) for Effective Interaction with Human Cells*" என்ற தலைப்பிலும் முனைவர் பக்கிரிசாமி தனது ஆராய்ச்சி முடிவுகளை வெளியிட்டு, தனது போக்கிரித்தனத்தை காட்டிவிட்டார். சித்தா தங்க பற்பத்தை எடுத்து ஆராய்ச்சி செய்து விட்டு, அதை ஆயுர்வேத சொர்ண பஸ்மா என்று வெளியிடுவதில்தான் எவ்வளவு மகிழ்ச்சி அவருக்கு. வரிக்கு வரி ஆயுர்வேத சொர்ண பஸ்மா என்று எழுதிவிட்டு, முடிவில், இது மனிதனுக்கு சிறந்தது என்று முடிக்கிறார். இந்த கட்டுரைகளை காட்டி, ஆயுர்வேத மருந்து கம்பெனிகள் உலக அளவில் வியாபாரத்தை களைகட்டும் முயற்சியில் ஈடுபடுகின்றனர். இப்படி திரித்து கூறுவதற்காக பக்கிரிசாமிக்கு பணம் கொடுக்கபட்டதா, மிரட்டல் விடப்பட்டதா,

அரசியல் அழுத்தம் கொடுக்கப்பட்டதா, தெரியாமல் செய்துவிட்டாரா, ஏதாவது பத்மபூஷன் ஆசைவார்த்தை சொல்லபட்டதா, தமிழை அழிக்க செய்தாரா, தமிழ் என்று வெளியே சொன்னா அவருக்கு கேவலம் ஆகுமா, என்ன காரணம் என்பது ஆண்டவனுக்கே வெளிச்சம். கட்டுரை வெளிவந்த பிறகு, டாக்டர். சிவராமன் மற்றும் டாக்டர். ஜெயபிரகாஷ் நாராயணன் இது குறித்து பேச மறுத்து விட்டனர். அவர்கள் ஏதாவது வாய் திறக்கமாட்டார்களா என்று ஒட்டுமொத்த தமிழர்களும் எதிர்பார்த்து ஏமாற்றம் அடைந்தனர்.

2023 ஆம் ஆண்டு, பக்கிரிசாமி இந்தியாவந்த போது, நியூஸ் 7 தொலைகாட்சியில் பேசும்தலைமை என்ற நிகழ்ச்சியில் இவரை பேட்டி எடுக்கிறார்கள். தான் பெரிய ஆராய்ச்சியாளன் என்று புளங்காகிதம் அடைகிறார். சென்னையில் நடைபெற்ற தமிழர் மாநாட்டில் பக்கிரிசாமிக்கு அவரின் ஆராய்ச்சிகளுக்காக விருதுகளும் வழங்கப்படுகின்றன. பல்வேறு சித்த மருத்துவ நிறுவனங்களுக்கும் சென்று பேசி பாராட்டுகளை பெறுகிறார். எவருமே பக்கிரிசாமியின் போக்கிரிதனத்தை பேசவில்லை, அது தவறு என்றும் அவரிடம் சொல்லவில்லை. எனவே தான் செய்தது தவறு என்று அவருக்கு தோன்றவே இல்லை.

அறிவியல் இதழ்களில் கட்டுரை வெளிவந்த பிறகு கூட, அதில் தேவைப்பட்டால் மாற்றங்கள் செய்து மறுவெளியீடு செய்யும் முறை உள்ளது, இதை *Corrigendum* என்பர். இந்த நிலையில், இதற்கு என்ன தீர்வு என்று நான் ஆராய்ந்த போது, அந்த இரண்டு இதழ்களின் ஆசிரியர்களையும் தொடர்புகொண்டு உண்மையை தெரிவித்து *Corrigendum* என்ற அடிப்படையில், இரண்டு கட்டுரைகளின் தலைப்பில் சித்தா தங்க பற்பம் என்று வெளியிட இ-மெயில் மூலம் கோரிக்கை வைத்தேன். அது பக்கிரிசாமிக்கு அனுப்பப்பட்டது. அவர் பின்வருமாறு பதில் அளித்தார்: “எனக்கு ஆயுர்வேதா சித்தா பற்றிய கவலை இல்லை. சொர்ண பஸ்மாவும், தங்க பற்பமும் ஒன்றுதான். அனைத்து சித்த மருத்துவர்களும், தமிழர்களும் இந்த ஆராய்ச்சிக்காக என்னை பாராட்டுகிறார்கள். சித்த மருத்துவத்தின் உயரிய நிறுவனங்கள் என்னை அங்கீகரித்துள்ளன. மூத்த சித்த மருத்துவர்கள் இது குறித்து எந்த கருத்தும் தெரிவிக்கவில்லை என்பதில் இருந்தே, நான் செய்தது தவறு இல்லை என்பது நிரூபணம் ஆகிறது. ஒட்டு மொத்த தமிழர்களும் என்னை ஏற்றுகொண்டார்கள், எந்த எதிர்கருத்தும் சொல்லப்படவில்லை. எனவே அருள் அமுதன் என்ற இந்த தனிநபரின் கருத்துகளுக்கு செவிசாய்க்க வேண்டிய அவசியம் இல்லை. கட்டுரையின் தலைப்பில் சித்தா தங்க பற்பம் என்று மாற்ற வேண்டிய் அவசியம் இல்லை” என்று பதில் அளித்திருந்தார். இதற்கு ஏதாவது சொல்ல விரும்புகிறீர்களா என்று இதழின் ஆசிரியர் என்னிடம் கேட்டிருந்தார்.

பின்னர், இது குறித்த ஒரு வீடியோவை நான் யூடியூபில் பகிர்ந்த பிறகுதான் இப்படி ஒன்று நடந்து இருப்பது வெளியே தெரிய வந்தது. பக்கிரிசாமி அவர்கள் எனக்கு நெருக்கமான பலரிடம் சொல்லி, அவர்கள் என்னிடம் இதுகுறித்து பேசினர். “சித்தா தங்க பற்பம் என்று பெயர் மாற்றும் வரை நான் போராடுவேன்” என்ற ஒற்றை வரியில் நான் சொல்லி முடித்துவிட்டேன். நேரடியாக இன்றுவரை பக்கிரிசாமி அவர்கள் என்னிடம் பேசவில்லை, பேச விரும்பவில்லை. தலைப்பையும் மாற்றுவதில்லை என்று உறுதியாக இருக்கிறார். ஏற்கனவே ஆயுர்வேத கட்டுரையில் ஏற்பட்ட ஒரு குளறுபடிக்கு பிறகு, ஒன்றிய அரசின் ஆயுஷ் அமைச்சகம், ஆயுர்வேதா சித்தா போன்ற பாரம்பரிய மருந்துகளை பற்றிய ஆய்வுகள் செய்யும்போதும், கட்டுரைகள் வெளியிடும் போதும், கண்டிப்பாக சம்பந்தப்பட்ட மருத்துவர்களை உடன் வைத்திருக்க வேண்டும், அவர்களின் பெயர்களும் சேர்க்கப்பட வேண்டும் என்று உத்தரவும் பிறப்பித்துள்ளது. இப்படி செய்வதால், தவறான தகவலகள் தவிர்க்கப்படும். ஆனால், பக்கிரிசாமி இந்த ஆராய்ச்சியில் எந்த சித்த மருத்துவரைக் கேட்டு ஆயுர்வேத சொர்ண பஸ்மாவாக மாற்றினார் என்று விளக்க வேண்டும்.

இதுகுறித்த தகவல்களை, இந்தியாவில் சித்த மருத்துவம் சார்ந்த அனைத்து அரசு நிறுவனங்களுக்கும் அனுப்பிவைத்தேன். அப்போது டாக்டர்.மீனாகுமாரி அவர்கள் தேசிய சித்த மருத்துவ நிறுவனத்துக்கும், மத்திய சித்த மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்துக்கும் தலைவராக இருந்தார். அவர் ஒரு குழுவை அமைத்து, டாக்டர். ஜெயபிரகாக்ஷ் நாராயணனிடம் கருத்து கேட்டு, பெயரை மாற்ற வேண்டும் என்ற கோரிக்கையை நேச்சர் இதழின் ஆசிரியருக்கு அனுப்பிவைத்தார். என்னவென்று பார்க்கிறேன் என்ற ஒற்றை வரிதான் எப்பவும் பதிலாக வருகிறது.

சொர்ண பஸ்மாவும், தங்க பற்பமும் ஒன்றுதான் என்று சொல்லும் பக்கிரிசாமியால், ஏன் அதை தங்க பற்பம் என்று சொல்ல மனம்வரவில்லை? தங்க பற்பத்தை வைத்து செய்த ஆராய்ச்சியை ஏன் தங்க பற்பம் என்ற பெயரில் வெளியிடவில்லை?

ஆராய்ச்சி செய்யப்படாத ஒரு மருந்தை (சொர்ண பஸ்மா) செய்தேன் என்று பொய் சொல்வது சரியா? தமிழனாக இருந்து கொண்டு, தமிழனின் நானோடெக்னாலஜி அறிவியலை இருட்டடிப்பு செய்ய வேண்டிய அவசியம் என்ன? தமிழருக்கு உலக அளவில் உங்களால் கிடைக்க வேண்டிய பெருமையை நீங்கள் அன்னியருக்கு தாரை வார்த்து கொடுத்தது எப்படி நியாயம் ஆகும்? தமிழுக்கு கிடைக்க வேண்டிய அங்கீகாரத்தை நீங்கள் ஏன் தடுத்தீர்கள்? உங்கள் கட்டுரை நேச்சர் இதழில் சித்த மருத்துவம் என்ற தலைப்பில் வெளிவந்தால், அதுவல்லவோ நீங்கள் தமிழுக்கு செய்யும் மிகப்பெரும் தொண்டு. இதை செய்யாமல், நான் தமிழன், என்று எதன் அடிப்படையில் பேசும் தலைமை நிகழ்ச்சிக்கு பேட்டி கொடுத்தீர்கள்? எதன் அடிப்படையில் தமிழர்கள் கொடுக்கும் விருதுகளை வாங்க தமிழ் நாட்டுக்கு வருகிறீர்காள்? உங்கள் மனசாட்சி உறுத்தவில்லையா? ஏன் சித்த மருத்துவ ஆளுமைகள் மற்றும் அரசு சித்த மருத்துவ ஆராய்ச்சியாளர்கள் எவரும் தனது உரிமைக்காக பேசவில்லை? இது போன்ற தவறான செயல்களுக்கு யார்/எந்த அமைப்பு நடவடிக்கை எடுக்கும்? இது ஒரு வரலாற்று பிழைதானே, நீங்கள்தான் இதை சரிசெய்ய முடியும். இனியும் இந்த பெயர் மாற்றம் சாத்தியம்தானே, அதை செய்ய உங்களை தடுப்பது எது?

இவற்றை குறிப்பிட்டு, மறுபடியும் இதழ் ஆசிரியருக்கும், பக்கிரிசாமிக்கும் இ-மெயில் செய்தேன். மறுபடியும் பக்கிரிசாமியின் பதில்: "தனிப்பட்ட நபரின் கருத்துக்காக தலைப்பை மாற்றம் செய்ய என்னால் முடியாது. நான் ஒரு ஆராய்ச்சியாளர், அறிவியலை மட்டுமே பார்ப்பவன். வராலாறு, பாரம்பரியம் எல்லாம் எனக்கு தேவை இல்லை. எனவே சித்தா தங்க பற்பமும் ஆயுர்வேத சொர்ண பஸ்மாவும் வேறு வேறு என்று நீங்கள் நிரூபியுங்கள். அதன்பின் பெயரை மாற்றுகிறேன்" என்று பதில் அளித்திருக்கிறார். இதற்கு நான் பல அறிவியல் ஆராய்ச்சியகள் செய்தால்தான் பதில் அளிக்க முடியும்,

மஞ்சள் மற்றும் வேம்புக்கு அமெரிக்கா காப்புரிமை வாங்கியபோது, இந்திய அரசு போராடி அதை நிறுத்தி வைத்தது. அதைபோல தமிழக அரசு இதில் தலையிட்டு, பெயர் மாற்றத்தை கொண்டுவர வேண்டும்.

•

கட்டுரையாளர்: மருத்துவர்

கவிதை:
**ஜே.ஜெ.ஃபர்னாண்டஸ்**

# அன்பு சூலுற்ற ஆரணங்கின்...



ஆக்ஸிடாஸின் வற்றிப்போன
முதிய மூளையில்
அற்றுப்போகும் சொர்க்கங்கள்.
வற்றிய குளத்தை விடுத்து
வலசைபோகும் பறவைகள் போல்
கற்பனையும் கவிதையும்
காமமும் காதலும்
காணாமல் போகும்.
மிதிபடும் காலங்கள்
மீளா படிமங்களாய்
முதிய மூளைக்குள்.
துய்க்கத் துய்க்க
துலங்காத வாழ்க்கைக் கடல்!
புத்தனின் மௌனத்துள்
யசோதரையின் ஏக்கங்கள்.
ஏசுவின் முகம் துடைத்தத் துணியில்
மகதலேனா மரியாளின் ஏக்கங்கள்.
மகாத்மா காந்தியின் சுதந்திரத் தாகத்தில்
காய்ந்த சருகாய்
கஸ்த்தூரிபாயின் தாம்பத்யம்.
கைக்கோர்த்து முத்துக் குளிக்க
கடலளவுக் காதலுடன் ஒருத்தி
கிடைத்தவர்க்கு
முதுமையில் மோகமும்
காமமும் காதலும்
தொக்கி நிற்குமோ?
அன்பு சூலுற்ற ஆரணங்கின் அருகாமை
ஆயாச முதுமையை ஆசுவாசமாக்கும்.
"மோகத்தைக் கொன்றுவிடு அல்லாலென்றன்
மூச்சை நிறுத்திவிடு" என்று எழுதிய
முண்டாசு கட்டிய முரட்டுக் கவிஞனவன்
எப்பாடு பட்டானோ!